بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *09/10/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

### அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தல் குறித்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் தூய முன்மாதிரி

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ- أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் அலை) அவர்களின் 'தவக்குல்' (அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை) பற்றிய நிகழ்வுகளை விவரிக்கும் போது, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்**; டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சிகிச்சையை பொருத்தவரை ஹுஸூர் (அலை) அவர்களுடைய வழிமுறை யாதெனில் அன்னார் ஒருபோதும் ஒரே வகையான சிகிச்சையை மேற்கொள்ள மாட்டார்கள். மாறாக, ஒரே நோய்க்கு ஆங்கில மருந்துகளையும் தருவார்கள்; யுனானி மருந்துகளையும் (தருவார்கள்). எவரேனும் ஒருவர் பயனுள்ள கருத்தை கூறினால் அதன்படியும் செயல்படுவார்கள். ஒருவேளை எவருக்கும் கனவின் மூலம் ஏதாவது தெரிய வந்தால் சில சமயங்களில் அதன்படியும் செயல்படுவார்கள். அதே நேரத்தில் துஆவும் செய்வார்கள். ஒரே நேரத்தில் மருத்துவர்களுடனும், ஹக்கீம்களுடனும் கலந்தாலோசனை செய்வார்கள். மருத்துவ நூல்களைப் பார்த்தும் சிகிச்சையில் உதவி பெறுவார்கள். சுருக்கமாகச் சொன்னால், சிகிச்சையை ஒன்றாக கலந்து விடுவார்கள். மேலும், அன்னாரது உண்மையான நம்பிக்கை எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீது மட்டுமே இருந்தது.

**நபிமார்களுக்கும் சாதாரண மனிதர்களுக்கும் இடையிலான அமைதியின்மைக்கான வித்தியாசத்தைத் தெளிவுபடுத்தியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: “மனித இயல்பின் காரணமாக மனிதனுக்கு ஒருவிதப் பதற்றம் ஏற்படுகின்றது என்றாலும், அது மனித இயல்பின் ஓர் அம்சமாகும். எல்லா நபிமார்களும் இதற்கு உட்பட்டவர்களே ஆவர். உதாரணமாக, பத்ர் போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பதற்றம் ஏற்பட்டது. சாதாரண மக்களுக்கும் நபிமார்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், சாதாரண மக்களைப் போல நபிமார்களுக்கு ஒருபோதும் அவநம்பிக்கையுடன் கூடிய பதற்றம் இருப்பதில்லை. அல்லாஹ் தஆலா தங்களை ஒருபோதும் கைவிடமாட்டான் என்பதில் அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை இருக்கும்.”

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: “எனது நிலை என்னவென்றால், என்னை எரியும் தீயில் தூக்கிப் போட்டாலும் கூட, நான் ஒரு போதும் வீணாக மாட்டேன் என்ற எண்ணமே ஏற்படுகிறது. நெருப்பு என்பதனால் அதில் மனிதன் எரிந்து விடுவான் என்ற பதற்றம் வேண்டுமானால் இருக்கும். ஆனால், ‘நெருப்பே! இப்ராஹீமுக்காக தணிந்து விடு! அவருக்கு பாதுகாப்புக்கு காரணமாக மாறிவிடு’ என்ற குரல் கேட்கும் எனும் நம்பிக்கை இருக்கும். ஆனால் மற்றவர்களின் பதற்றத்தில் அவநம்பிக்கை இருக்கின்றது. நம்பிக்கை இல்லாதவர்களுக்கே அவநம்பிக்கை ஏற்படும். இறைவனின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருப்பதில்லை; இது இறை

நிராகரிப்பு ஆகும். இந்த நிலை குஃப்ரின் நிலை ஆகும். எனவே, பதற்றமான சூழ்நிலையில் இறைவன் மீது நம்பிக்கை வைப்பது எவ்வாறு நபிமார்களின் தனித்துவமான பண்போ அதேபோல், ஒரு நம்பிக்கையாளர், நபிமார்களின் வழிமுறையைப் பின்பற்றி, குறிப்பாக ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றி, கவலை மற்றும் அவநம்பிக்கையைத் தன் பக்கம் நெருங்க விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நிம்மதியின்மையின் போதும் அல்லாஹ் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டும்; துஆக்களின மீது அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும்; அதன் பிறகு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்."

நம்பிக்கை கொண்டவரின் வேலை அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து வாழ்வதுதான் என்றும், அவநம்பிக்கை அருகில் கூட வரக்கூடாது என்றும் அன்னார் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்**: கபூர்தலாவைச் சேர்ந்த முன்ஷி ஸஃபர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஆண்டு மாநாட்டின் போது நிதி நெருக்கடி காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் விருந்தினர்களுக்காக தமது மனைவியின் நகைகளை விற்று அல்லது அடகு வைத்து ஏற்பாடு செய்தார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் செலவுக்குத் தேவை ஏற்பட்டபோது, ‘யாருடைய விருந்தினர்களோ அவனே ஏற்பாடு செய்வான்’ என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். மறுநாள் காலை வெவ்வேறு இடங்களிலிருந்து ஐம்பது ரூபாய் மற்றும் நூறு ரூபாய்க்கான பல மணி ஆர்டர்கள் வந்து சேர்ந்தன. இந்த நிகழ்விலிருந்து கிடைக்கும் பாடம், அல்லாஹ் மீது முழுமையான நம்பிக்கை வைத்தால், தேவைப்படும் நேரத்தில் அவன் தரப்பிலிருந்து மறைவாக உதவி வந்து சேரும் என்பதாகும்.

**ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: நமது ஹஸ்ரத் ஸாஹிப் (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் அலை.....,) அவர்கள் கூறினார்கள்; தன்னிடம் செல்வம் இருக்கிறது என்பதில் சிலருக்கு மகிழ்ச்சி இருக்கும். தனக்கு நிறைய சந்ததிகள் இருக்கிறார்கள் என்பதில் சிலருக்கு மகிழ்ச்சி இருக்கும். தனது புகழ் மிகவும் அதிகம் என்பதில் சிலருக்கு மகிழ்ச்சி இருக்கும். ஆனால், என் இறைவன் சர்வவல்லமையுள்ளவன் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: உண்மையான ராஸிக் (வாழ்வாதாரம் அளிப்பவன்) அல்லாஹ் தஆலாதான். எவர் அவன்மீது நம்பிக்கை வைக்கிறாரோ, அவர் ஒருபோதும் வாழ்வாதாரத்திலிருந்து விலக்கப்பட மாட்டார். அவன் எல்லா விதத்திலும் எல்லா இடத்தில் இருந்தும் தன் மீது நம்பிக்கை வைக்கும் நபருக்காக வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி தருகிறான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்; யார் என்மீது நம்பிக்கை வைக்கிறாரோ, நான் அவருக்காக வானத்திலிருந்து பொழியச் செய்கிறேன்; கால்களின் கீழிருந்து வெளிப்படுத்துகிறேன். எனவே, ஒவ்வொரு நபரும் அல்லாஹ் தஆலா மீது மட்டுமே முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும்.

**ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: “ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களின் சிறு வயதில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஈமானுக்கு நம்பிக்கையையூட்டும் ஒரு கதையைக் கூறினார்கள். ஒரு பெரியவரின் அறிவுரையினால் ஒரு திருடன் திருடுவதை

விட்டுவிட்டு அல்லாஹுத் தஆலா மீது நம்பிக்கையும் அச்சத்தையும் மேற்கொண்டார். இதனால் அந்த நபரின் தேவைகள் மறைமுகமாக நிறைவேறத் தொடங்கின. திருக்குர்ஆன் வசனங்கள் அவரது உள்ளத்தில் அல்லாஹ்வின் மகத்துவத்தையும் இறைவனைப் பற்றிய ஞானத்தையும் எந்த அளவுக்கு அதிகரித்தனவென்றால், அவர் இறைவனின் மீதான நேசத்தில் துடிதுடித்தார். இந்த நிகழ்வு தரும் பாடம் என்னவென்றால், உண்மையான தவக்குலும், தக்வாவும் மனிதனை அல்லாஹ் தஆலாவுடைய நெருக்கத்தையும் இறைவனைப் பற்றிய ஞானத்தையும் எந்த அளவுக்கு உயர்த்துகின்றன என்றால் அங்கு அவனது உலகளாவிய தேவைகளும் அல்லாஹ்வின் அருளால் முழுமையாக நிறைவேறுகின்றன."

பொதுவாக மக்கள், குழந்தைகளிடம் அதிக ஆழமான விஷயங்களைக் கூறினால் அவர்களுக்குப் புரிவதில்லை என்று கூறுகிறார்கள். ஆனால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் அதாவது, ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களுக்கு ஒன்பது வயது இருக்கும்போது இந்தக் கதையைக் கூறினார்கள். நிச்சயமாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களின் புத்தி கூர்மைக்கு ஏற்ப இந்தக் கதையை கூறியிருப்பார்கள். அவர் புரிந்து கொள்வார் என்று அன்னாருக்கு தெரிந்திருந்தது. ஆனால், குழந்தைப் பருவத்திலிருந்தே இறைவனிடம் நம்பிக்கை வைத்தலின் முக்கியத்துவத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதும் அன்னாருடைய கண்ணோட்டமாக இருந்தது என்பதும் தெரிய வருகிறது. எனவே, தர்பிய்யத்தின் இந்த வழிமுறை நம் அனைவருக்கும் வழிகாட்டியாக உள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள்**: "என் பார்வையில் மிகப்பெரிய இணைவைப்பவர் ரசவாதி ஆவார். இவர்கள் வாழ்வாதாரத்தைத் தேடி அலைகிறார்கள். மேலும் வாழ்வாதாரத்தைப் பெறுவதற்காக இறைவனால் அனுமதிக்கப்பட்ட காரணிகளால் பயன்பெறுவதில்லை...... இறையச்சம் (தக்வா) என்பது எப்படிப்பட்டதொரு விஷயம் என்றால் எவருக்கு அது கிடைத்து விட்டதோ அவர் உலகத்தின் அனைத்து செல்வங்களும் கிடைத்துவிட்டதைப் போன்று ஆகிவிடுகிறார். நினைவில் கொள்ளுங்கள்! இறையச்சம் உள்ளவர் ஒரு போதும் பிறருடைய தேவை உடையவராக இருக்க மாட்டார். மாறாக அவர் எந்த நிலையில் இருக்கிறார் என்றால், எதை அவர் விரும்புகிறாரோ அதை இறைவன் அவர் கேட்பதற்கு முன்பே வழங்கிவிடுகிறான்."

அன்னார் கூறுகிறார்கள்: நான் ஒரு கஷ்ஃபில் அல்லாஹுத்தஆலாவை கண்டேன். என் தோள்மீது அல்லாஹுத்தஆலா (தன்) கையை போட்டவாறு, 'நீ எனக்காக ஆகிவிட்டால் உலகம் அனைத்தும் உனக்காக ஆகிவிடும்' என்று கூறினான். எனவே, இதுதான் அனைத்து நபிமார்கள், இறை நேசர்கள் மற்றும் நல்லடியார்களால் சோதிக்கப்பட்ட வழிமுறையாகும். அறிவற்ற மனிதர்கள்தான் அதனை விட்டுவிட்டு மூலிகைகளைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய கடின உழைப்பை அந்த மூலிகைகளை படைத்தவனுக்காக செய்தால் அவர்கள் விரும்புகின்ற அனைத்தும் கிடைத்து விடும்.

பாதிரியார் அப்துல்லாஹ் ஆத்தம் பதினைந்து மாத காலத்தில் அழிவான் என்ற ஒரு முன்னறிவிப்பு இருந்தது. பதினைந்து மாத காலம் முடிவடையும் தருவாய் இருந்தபோது, ஆத்தம் இறந்துவிட வேண்டும் என்று சில நபர்கள் அழுதழுது துஆ செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஹுஸூர் (அலை) அவர்கள் அந்த நபர்களின் இந்தச் செயலை விரும்பவில்லை. 'இறைவனுடைய வார்த்தைகளுக்காக இறைவனை

விட மேலாக எவருக்கும் தன்மானம் பொங்கிடுமா? இவ்வாறு நடக்கும் என்று இறைவன் கூறி இருக்கிறான் என்றால் அவ்வாறே நிச்சயம் நடக்கும் என நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். நமது வேலை, நாம் ஒருவரை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால் அவரது வார்த்தைகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்' என்றார்கள்.

அப்துல்லாஹ் ஆத்தமுடன் விவாதம் நடந்துகொண்டிருந்த போது, ஒரு சந்தர்ப்பத்தில் சில கேள்விகள் முன்வைக்கப்பட்டன. ஜமாஅத்தினர்கள் சிலரைப் பொறுத்தவரை அவற்றுக்கான பதில்கள் மிகவும் கடினமாக இருந்தன. அவர்களின் பார்வையில் அவை குறித்து ஆலோசனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அது தொடர்பான சிலர் பயனுள்ள ஆதாரங்களை தேடி ஹுஸூர் (அலை) அவர்களிடம் எடுத்து வைத்து, ஹுஸூர்! நாளைய விவாதத்துக்காக ஆலோசனை செய்யலாமே என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் அதற்கு புன்னகைத்தவாறு உங்களது துஆ போதுமானது என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** நபிமார்கள் பெரும்பாலான காரியங்களில் ஆலோசனை பெறுகிறார்கள். அவர்களை விட அதிகமாக வேறு யாரும் ஆலோசனை பெறுவதில்லை. ஆனால் சில சந்தர்ப்பங்கள் எப்படிப்பட்டவையாக இருக்கும் என்றால், அதில் அவர்கள் மற்ற தொடர்புகளை விட்டுவிட்டு அல்லாஹ்வின் உதவியின் மீது மட்டுமே நம்பிக்கை கொள்ள விரும்புகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலின் அரபுப் பகுதி எழுதிக் கொண்டிருந்தபோது, அன்னார் பெரியதொரு இரு பக்கங்களைக் கொண்ட தாளை ஹஸ்ரத் ஹக்கீம் மௌலவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களிடம் கொடுத்திருந்தார்கள். ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்களிடம் அதனை பாரசீக மொழியில் மொழிபெயர்க்க அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். அது எத்தகைய கட்டுரையாக இருந்தது என்றால், அதன் தெளிவு மற்றும் சொற்செறிவைக் கண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பெருமிதம் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அல்லாஹ் மிகச் சிறந்ததொரு கட்டுரையை விளக்கியிருந்தான் என்பதனால். ஆனால், ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களிடமிருந்து அந்த இரண்டு பக்கத் தாள் எங்கோ விழுந்துவிட்டது. ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் அந்தப் பக்கங்களைப் பற்றி கேட்டபோது, ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் சாஹிப் அவர்களின் முகம் வெளிறிப் போனது. எவ்வளவோ தேடப்பட்ட போதிலும் அது கிடைக்கவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டது.

அன்னார் வழக்கம்போல் மிக மகிழ்ச்சியாகவும், புன்னகையுடனும் வெளியே வந்தார்கள். கவலைப்படுவது அல்லது பதற்றத்தை வெளிப்படுத்துவது ஒருபுறம் இருக்கட்டும்; தமது தரப்பிலிருந்து மன்னிப்புக் கேட்டவாறு, ‘மௌலவி சாஹிப் அவர்களுக்கு அந்தப் பிரதி தொலைந்து போனதால் தேவையற்ற கவலை ஏற்பட்டுவிட்டது. மௌலவி சாஹிப்புக்கு ஏற்பட்ட சிரமத்தைக் குறித்து எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. ஆனால் எனது நம்பிக்கை என்னவென்றால், அல்லாஹ் தன் அருளால் தொலைந்துபோன தாளை விட மிகச் சிறந்ததொரு கட்டுரையை எழுதும் பாக்கியத்தை வழங்குவான்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாத்திற்குத் தொண்டு செய்யும் நபர் எளிமை மற்றும் போதுமென்ற மனமுடன் செய்வார் என்றால் அவர் ஓர் அற்புதமாகவும் அடையாளமாகவும் ஆகி விடுகின்றார். ஆனால், எந்தவொரு நபர் கூட்டத்தோடு கூட்டமாக மேலோட்டமாக செயல்படுகிறாரோ அவருக்கு அதில் இன்பம் கிடைப்பதில்லை; ஏனெனில், அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையின் பரிபூரணமான இன்பம் அதில் இருக்காது. அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையுடன் வேலை செய்யப்படும்போது, அல்லாஹ் உதவி செய்கிறான். மேலும், இந்த விஷயங்கள் ஆன்மிகத்தால் உருவாகின்றன.

மேலும் கூறுகிறார்கள்: "உண்மையில் இறை நம்பிக்கைதான் மனிதனை வெற்றிகரமானவனாகவும், அவனது விருப்பங்களை நிறைவு செய்பவனாகவும் மாற்றக்கூடிய ஒரு விஷயமாகும். எவர் அல்லாஹ் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ அல்லாஹ் அவருக்கு போதுமானவனாக ஆகி விடுகின்றான். நிபந்தனை யாதெனில் உண்மையான உள்ளத்துடன் தவக்குலின் உண்மையான கருத்தைப் புரிந்து கொண்டு, உண்மையான மனதுடன் காலெடுத்து வைக்க வேண்டும். மேலும் பொறுமையை மேற்கொள்பவர் நிலைத்திருக்க கூடியவராகவும் கடினங்களிலிருந்து அஞ்சி பின்வாங்காதவராகவும் இருக்க வேண்டும்."

மனிதனுக்கு மார்க்கத்தின் கவலை மேலோங்கி விடும்போது உலக விவகாரங்களில் இறைவனே உறுதுணையாகி விடுகின்றான். பெரும் பெரும் பேரழிவுகள் நாளுக்கு நாள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மக்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை; கவனத்தில் கொள்வதில்லை என்பது வருத்தமளிக்கிறது. மூஸா (அலை) அவர்களின் காஃபிர்களோ நல்லவர்களாக இருந்தார்கள். ஏனெனில், அவர்கள் மீது சோதனைகள் இறங்கியபோது அவர்கள் உடனடியாக கவனம் செலுத்தி, "இது விலகிவிட்டால் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்" என்று கூறினார்கள். ஆனால், இன்றைய காலத்தின் காஃபிர்களோ மிகவும் கடினமான உள்ளம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். நாளுக்கு நாள் புதிய தண்டனைகள் வந்து கொண்டிருக்கின்றன; அல்லாஹ்வின் கோபம் புது புது வடிவங்களில் இறங்குகின்றது. ஆனால் நிலைமை என்னவென்றால், அவர்களின் காதுகளில் எதுவும் நுழைவதில்லை. அல்லாஹ்வின் தொன்மையான வாக்குறுதி யாதெனில், இறுதி காலத்தில் பல்வேறு விதமான தண்டனைகள் வரும். அந்த நேரத்தில் சிலர் நேர்வழி பெறுவார்கள்; பெரும்பான்மையானவர்கள் அழிந்து விடுவார்கள். இறைவனோ அடையாளத்தை காட்டுகின்றான். ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் மட்டுமே அதிலிருந்து பயனடைகிறார்கள்.

உலகத்திலுள்ளவர்களுக்கு அல்லாஹ் அறிவை தர வேண்டும்! அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி, தமது உலக மற்றும் மறுமை வாழ்க்கையைச் சரிசெய்து கொள்ள வேண்டும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம். நம்மையும் இறைவன் ஈமானிலும் உறுதிப்பாட்டிலும் மேம்படுத்துவானாக. மேலும் நாம் துஆக்களுடன், தவக்குலின் மிக உயர் தரத்தை அடைபவர்களாகவும், அதில் முன்னேறுபவர்களாகவும் ஆவோமாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)